இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 15.03.2026


# பிரதமர் பேச்சு கண்டனத்துக்குரியது!

**திருச்சி பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி ஆற்றிய உரை, அவர் வகிக்கும் பதவிக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. அவர் வகிக்கும் பதவிக்குத் தகுதியான உரையை அவர் ஆற்றவில்லை. பா.ஜ.க.வின் நாலாந்தரப் பேச்சாளர் பேசுவதைப் போல வாய்க்கு வந்த அவதூறுகளை அள்ளித் தெளித்து பிரதமர் ஆற்றிய உரை கடும் கண்டனத்துக்குரியது.**

**அ.தி.மு.க.வைக் காவு வாங்கி தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி என்ற போர்வையில் பா.ஜ.க.வை கொள்ளைப் புறம் வழியாகக் கொண்டு வர நினைக்கிறார் பிரதமர் மோடி. அவருக்கு எப்போதும் நேரிய வழி தெரியாது. குறுக்கு வழியில் மாநில ஆட்சிகளைப் பிடிப்பதுதான் அவர்களது குணம். அதற்கு ஏற்ப எடப்பாடி பழனிசாமியின் கோழைத்தனத்தை முதலீடாக வைத்து வயிறு வளர்க்கப் பார்க்கிறது பா.ஜ.க. இந்த அரசியல் கயமையை மறைக்க தி.மு.க. ஆட்சி மீதான அவதூறுகளை அள்ளி வீசுகிறார் பிரதமர்.**

நரேந்திர மோடி இந்த நாட்டின் பிரதமராக வந்து 12 ஆண்டுகள் ஆகிறது. மூன்றாவது முறையாக பிரதமர் ஆகி இருக்கிறார். கடந்த 12 ஆண்டுகளில் இந்திய நாட்டுக்குச் செய்த நன்மைகளை தனது பேச்சில் சொன்னாரா என்றால் இல்லை. தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்த திட்டங்களை வரிசைப்படுத்திச் சொன்னாரா என்றால் இல்லை. மாறாக தி.மு.க. அரசு குறித்த பொய்களையே தனது உரையில் அதிகமாகச் சேர்த்து வைத்து வாசித்திருக்கிறார் பிரதமர். இவை அனைத்தும் உண்மைகள் அல்ல, அப்பட்டமான அவதூறுகள்.

**ஒரு வாக்குறுதியையும் தி.மு.க. நிறைவேற்ற வில்லையாம். பிரதமர் கண்டுபிடித்து இருக்கிறார். தி.மு.க. செய்த சாதனை என்ன என்பதை தெருவில் இறங்கிக் கேட்கவும். மக்கள் சொல்வார்கள்.**

‘தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை’ என்பதை வலியுறுத்த படாத பாடு படுகிறார் பிரதமர். எந்த அடிப்படையில் இதனைச் சொல்கிறார்? அதற்கு என்ன ஆதாரம்? பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகள் அதிகம் ஆகி இருக்கிறது என்பதற்கு ஏதாவது ஆதாரம் வைத்துள்ளாரா? பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது என்பதற்கு ஏதாவது ஆதாரம் வைத்துள்ளாரா? ஏதுமில்லை.

‘தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் பெண்களை அச்சமின்றி வாழ வைப்போம்’ என்கிறார் பிரதமர். இதை மணிப்பூரில் போய் சொல்லத் தயாரா? இதை உ.பி.யில் போய் அவரால் சொல்ல முடியுமா? அந்த மாநிலப் பெண்களிடம் போய் கேட்டுப் பாருங்கள், பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் படும் அவஸ்தைகளை!

**ஒரு குடும்பத்துக்கான ஏ.டி.எம். மிஷினாக தமிழ்நாடு இருக்கிறதாம். இப்படித்தான் பொறுப்பற்ற வகையில் பிரதமர் பேசுவதா? ஒரே ஒரு குடும்பத்துக்கான ஏ.டி.எம். மிஷினாக இந்தியாவை மாற்றியதுதானே பிரதமர் மோடியின் சாதனை? ‘எங்கெல்லாம் மோடி செல்கிறாரோ அந்தந்த நாட்டுக்கு எல்லாம் அடுத்து அதானி செல்வார், தொழில் தொடங்குவார்’ என்று ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் சொன்னாரே? இதுவரை பதில் சொன்னாரா பிரதமர்? இதை இன்னும் பகிரங்கமாக டெல்லி சட்டமன்றத்தில் அரவிந்த கெஜ்ரிவால் பேசிய பிறகுதானே அவருக்கு இடைஞ்சல் ஏற்பட்டது? கைது செய்து சிறையில் அடைக்கப்படும் சூழல் வந்தது? ஊழலைப் பற்றி யார் பேசுவது?**

ஒரு குறைந்தபட்ச புள்ளிவிபரங்களை சரி பார்த்திருந்தால் கூட பிரதமர் பேச்சு இவ்வளவு அபத்தமாக இருந்திருக்காது. ‘விவசாயிகளுக்கு தானிய சேமிப்புக் கிடங்குகளை உருவாக்குவோம் என்ற வாக்குறுதியை தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை’ என்று பேசி இருக்கிறார் பிரதமர். அதிகமான சேமிப்புக் கிடங்குகளை உருவாக்கியதாக தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கி இருப்பதே ஒன்றிய பா.ஜ.க. அரசு தான்.

டெல்லியில் உள்ள தேசிய கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைப் பதிவு செய்ததற்காகத் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு கடந்த 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 230 நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.359 கோடியில் மேல் கூரையுடன் நெல் சேமிப்புத் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2011-2021 ஆகிய பத்தாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு 7 இலட்சத்து 27 ஆயிரத்து 650 மெட்ரிக் டன். ஆனால் கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் மற்றும் கட்டப்படவுள்ள கிடங்குகளின் கொள்ளளவையும் சேர்த்தால் 7 இலட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் ஆகும். இந்தப் புள்ளிவிபரத்தைக் கூட கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் அவதூறுப் பேச்சு பேசுகிறார் பிரதமர்.

**தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான புல்லட் ரயில் வைத்துள்ளாராம். மோடி சொல்கிறார். மதுரைக்கு மெட்ரோ ரயில் கேட்டோம். தரவில்லை. திருச்சிக்கு மெட்ரோ ரயில் கேட்டோம். தரவில்லை. கோவைக்கு மெட்ரோ ரயில் கேட்டோம். தரவில்லை. சென்னைக்கு இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கும் முழுமையான நிதியைத் தரவில்லை. இந்த லட்சணத்தில் புல்லட் ரயில் விடப் போவதாகப் புளுகுகிறார் மோடி.**

**கூரை ஏறி கோழி பிடிக்க முடியவில்லை. வானம் ஏறி வைகுண்டம் காட்டுவாராம். அப்படித்தான் இருக்கிறது பிரதமர் மோடியின் ‘கப்சா’ உரைகள்!**

# சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

## கொ.ம.தே.க.வுக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு!



நடைபெற உள்ள 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களும் இன்று (13–03–2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, தமிழ்நாட்டில் 2 (இரண்டு) சட்டமன்றத் தொகுதிகளில்,உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

(ஈ.ஆர்.ஈஸ்வரன்)
பொதுச்செயலாளர்,
கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

## திராவிட மாடல் ஆட்சி

# சென்னையில் அரைநூற்றாண்டு வளர்ச்சியை 5 ஆண்டுகளில் சாதித்துக் காட்டியுள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!









சென்னை, மார்ச். 15-

திராவிட மாடல் ஆட்சி, சென்னையில் அரை நூற்றாண்டு வளர்ச்சியை 5 ஆண்டுகளில் சாதித்துக் காட்டியுள்ளது எனறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பக்கத்தில் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:

**பாலங்கள் – 36 (முடிவுற்றவை 19, நடைபெறுபவை 17) பூங்காக்கள் மேம்பாடு – 236 பணிகள் மழைநீர் வடிகால்கள் – 1,442 கிலோமீட்டர் பள்ளிகள் மேம்பாடு – ரூ. 533 கோடி குடிநீர்த் திட்டப் பயன்பாடுகள் – ரூ. 5,447 கோடி சாலைகள் மேம்பாடு – 3,455 கிலோமீட்டர் வடசென்னை வளர்ச்சித் திட்டம் சுமார் 7,000 கோடி ரூபாய் இவை தவிர, பல்வேறு முதல்வர் படைப்பகங்கள், விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டுத் திடல்கள், நவீன வசதிகளுடன் கூடிய திருமண மாளிகைகள், புத்தம்புதிய வடிவமைப்பிலான பேருந்து நிலையங்கள், தாழ்தள மின் பேருந்துகள் எனச் சென்னையின் தோற்றம் ஏற்றம் பெற்றிருக்கிறது! இன்னும் செய்வோம், உலகத்தர உட்கட்டமைப்புடன் எழில்மிகு சென்னையாக 2030இல் வளர்த்தெடுப்போம்!**

#SingaraChennai 2.0 loading in #DravidianModel 2.0!

**வெல்வோம் ஒன்றாக**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# கரூரில் முதல்வர் படைப்பகம் - நலத்திட்ட உதவிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்து வழங்கினார்!

கரூர், மார்ச் 15 –

கரூரில் புதிதாக கட்டப்பட்ட முதல்வர் படைப்பகம், அரசு இசைக் கல்லூரி, நவீன உடற்பயிற்சி கூடத்தினை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார். 47 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும் வழங்கினார்.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதியதாக முதல்வர் படைப்பகம். ரூ. 1.78 கோடி மதிப்பீட்டில் அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம், ரூ 61.60 லட்சம் மதிப்பீட்டில் புதிய உடற்பயிற்சிக் கூடம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**முதல்வர் படைப்பகம் திட்டம்**

நவீன அறிவியல் மாற்றத்திற்கேற்ப மாணாக்கர்கள் தங்களுடைய திறன்களை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசால் சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

தொழில்முனைவோர் தங்களின் புதிய தயாரிப்புகளை உருவாக்குவதற்கும். வடிவமைப்பு செய்வதற்கும் தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை ஒரே இடத்தில் வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதனடிப்படையில் தரைதளத்தில் பகிர்ந்த பணியிட சேவை வழங்கப்படுகிறது. இங்கு மென்பொருள் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த நிறுவனம் நடத்துவோர் 38 பேர் பணி யாற்ற இருக்கைகள் மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதல் தளமானது கல்வி மையமாக செயல்படுகிறது. இங்கு ஒரே நேரத்தில் 51 பேர் அமர்ந்து படிக்கும் வகையில் வசதிகள் உள்ளன. இங்கு யு.என்.பி.எஸ்.சி. யு.பி.எஸ்.சி. ஆர்.ஆர்.பி. நீட் உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள் கிடைக்கும். மாணவர்களிடம் லேப்டாப் இருந்தால், அதையும் இங்கு கொண்டு வந்து பயன்படுத்தலாம். இணையதளத்தில் தகவல் தேட வசதியாக FREE WIFI மற்றும் 3 கணிணிகளும் நிறுவப்பட்டுள்ளன.

கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் சுமார் 5,369 சதுர அடி பரப்பளவுடன் கட்டப்பட்டுள்ள அரசு இசைப் பள்ளி கட்டடம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ. 61.60 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட உடற்பயிற்சி கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறை சார்பில் கரூர் வட்டத்தைச் சேர்ந்த 84 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் 47 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.49.73 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்.

கரூர் மாநகராட்சி வார்டு 2 ஜாமியா நகரில் ரூ. 65லட்சம் மதிப்பீட்டில் புதிதாக தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் ரூ.45.லட்சம் மதிப்பீட்டில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி என மொத்தம் ரூ. 1.30 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளையும் செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ், மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, துணை மேயர் ப.சரவணன், மண்டலக் குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ். ஆர்.எஸ்.ராஜா. அன்பரசன், சக்திவேல் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.